☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

## சிறப்புத் திங்கள் கருத்தரங்கம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பாகச் சிறப்புத் திங்கள் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை தாங்கினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்ததுகளோடு நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்,** துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** ஆகியோர் வாழ்த்தினர். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **இரா.சங்கர்** ஒருங்கிணைத்தார். தமிழ்த்துறைப் பேராசிரியர் **கு.இளங்கோவன்** உள்ளிட்ட பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இத்திங்கள் கருத்தரங்கத்தின் சிறப்பு விருந்தினராக, முனைவர் **சொ.செ.இளங்கோவன்** கலந்துகொண்டு **"மாணவர்களுக்கு மணவளக்கலை"** என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். அருட்தந்தை, வேதாத்திரி மகரிஷியின் கோட்பாடுகளைச் சுட்டிக் காட்டி மாணவர்கள் எவ்வாறு பண்போடு நடந்துகொள்ள வேண்டுமென எடுத்துரைத்தார். தொடர்ந்து மூச்சு பயிற்சியும் வழங்கினார். இக்கருத்தரங்கில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **செ.பிரபு ஆன்டன் செகாவ்** எழுதிய நூலை அறிமுகம் செய்தார். தமிழிலக்கிய மாணவி **மஞ்சுஸ்ரீ** வரவேற்புரையாற்றினார். மாணவி **மகாலட்சுமி** நன்றியுரையாற்றினார். மாணவர் **ராஜீவ் காந்தி** தொகுத்து வழங்கினார். அனைத்துத் துறைகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது படைப்புத் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் கவிதை, பேச்சு, கட்டுரைகளை வழங்கினர். தமிழலக்கிய மாணவ, மாணவியர் திரளாகக் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**

